Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 17 ஞாயிற்றுக்கிழமை (28-02-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 93

### தந்திக் கம்பத்தில் சடலங்கள்

திருகோணமலை மாவட்டம், சாம்பல்தீவுக் கிராமத்தில் மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள தந்திக் கம்பத்தி இருவரின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கட்டித் தொங்க விடப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தச் சடலங்களில் ஒன்று ஆணினுடையது. மற்றது பெண்ணின் சடலமாகும். அவை இளம் தம்பதியினருடையவை என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது (த-எ)

## உதவும் நாடுகள் வழங்கிய

# வட - கிழக்கு அபிவிருத்தி நிதி செலவிடப்படாமல் தேக்கம்

## திறைசேரி வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, பெப்ரவரி 28

கடந்த வருடம் இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவிடம் இருந்து பெறப்பட்ட உதவி நிதியில், வடக்கு - கிழக்கின் சில அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட பணம் செலவிடப்படாமல் தேங்கிக் கிடப்பதாகத் திறைசேரி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

அதனால் இம்முறையும் சென்ற முறை கோரியது போல 80 கோடி டொலர்களை மட்டுமே உதவும் நாடுகளிடம் இருந்து கேட்கப் போவதாகவும் திறைசேரி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் தூதுவர்களின் கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் வைத்து 80 கோடி டொலர் நிதி உதவி தருமாறு அரசாங்கம் கேட்டது.

இம்முறை சென்றவருடத்தைவிட அதிகமாகக்

(3ஆம் பக்கம் பார்க்க)

### கடற்கண்ணிச் சம்பவம்:

## கிளாலி கடலில் படையினரின் மேலும் இரு சடலங்கள் மீட்பு

### உயிரிழப்பு 4 ஆக அதிகரிப்பு

கொழும்பு, பெப். 28

ஸ்ரீலங்கா கடற்படையினரின் நவீன பீரங்கிப் படகு விடுதலைப் புலிகளின் கடற்கண்ணியில் சிக்கி வெடித்துச் சிதறிய சம்பவத்தில் உயிர் இழந்த கடற்படையினரின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.

கிளாலிக் கடலில் இருந்து மேலும் இரு கடற்படைச் சிப்பாய்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டதாக இராணுவ பேச்சாளர் ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் இரு கடற்படையினர் கொல்லப்பட்டனர் என்றும் மேலும் மூவர் படுகாயமடைந்தனர் என்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஒ)

### சென்னை, திருவான்மியூர் அருகே

## நீர்மூழ்கிப் படகு தயாரித்த இலங்கைத் தமிழர் கைதாம்

சென்னை, பெப். 28

மாதிரி நீர்மூழ்கிப் படகு ஒன்றை தயாரித்ததாகக் கூறப்படும் இலங்கைத் தமிழர் ஒருவரை தமிழக உளவுத் துறைப் பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பல மாதங்களாகத் தலைமறைவாகத் திரிந்த சண்முகவேலு என்னும் இவர், கடந்த 24ஆம் திகதி சென்னையின் புறநகர்ப் பகுதியான திருவான்மியூரில் வைத்து கைது செய்யப்பட்டார் என்றும்—

''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள இவர், தனி நீதிமன்ற உத்தரவின் பேரில் 60 நாள் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரைகுறை நிலையில் கட்டப்பட்டிருந்த 18 அடி நீளமான நீர்மூழ்கிப் படகு கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி படகை கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த சண்முகவேலு, 1991 ஜனவரியில் தமிழகம் ஜனாதிபதி ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டதை அடுத்து அதனைக் கைவிட்டிருந்தார் என்று கூறப்பட்டது.

இப்படகு கட்டி முடிக்கப்பட்டதும் நவீன கருவிகள் பொருத்தப்பட்டு விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட இருந்தது என்று பொலீஸார் கூறினார். (ஒ-எ-த)

## ம. எண்ணெய் கப்பலுடன் இரு புதிய 'பாஜ்'களும் வரும்

யாழ்ப்பாணம், பெப். 28

இரண்டாயிரம் பரல் மண்ணெய்யுடன் வடக்கே வரவுள்ள 'நில் கிரி' கப்பல் அவற்றை பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்குவதற்கு வசதியாக இரண்டு புதிய 'பாஜ்'களையும் இங்கு எடுத்து வரவுள்ளது.

இதேவேளை —

பருத்தித்துறைக்கு கப்பல் மூலம் அனுப்பப்படும் பொருள்களை துரிதமாக இறக்க முடியாதிருப்பது பற்றி யாழ். அரச அதிபர் கொழும்பில் பேச்சு நடத்தியதாகவும் —

பருத்தித்துறை இறங்கு துறையை சீரமைப்பதற்கு தேவையான பொருள்களை வழங்க அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## மலேரியா நோய் தீவிரமாக வடக்கு - கிழக்கில் பரவுகிறது

### நிபுணர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 28

வடக்கு—கிழக்கு பகுதி மலேரியா நோய் பரவும் ஆபத்துள்ள பகுதியாக மாறியுள்ளது. இப்போது நாடு முழுவதிலும் உள்ள மலேரியா நோயாளர்களில் 40 சத வீதமானோர் வடக்கு—கிழக்கையும் கொழும்பையும் சேர்ந்தவர்கள் என்று மலேரியா நோய்த் தடுப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அவசரமான தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கா விட்டால் நிலைமை மேலும் மோசமாகும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

ஆய்வுகளின் படி அநுராதபுரம், குருணாகலை, பொலனறுவை, புத்தளம் ஆகிய மாவட்டங்கள் மலேரியா நோயால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இக்கால மலேரியா நோயாளிகளில் 60 சத வீதத்தினர் இந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மிகுதி 40 சதவீத நோயாளிகள் வடக்கு - கிழக்கையும் கொழும்பையும் சேர்ந்தவர்கள்.

கடந்த மாதம் [illegible] வெளியிட்ட அறிக்கை ஒன்றில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 11 வருட ஈழப்போரில் புலிகள் வெற்றியடையும் சாத்தியம்

### அரசியல் ஆய்வாளர்கள் கருத்து

கொழும்பு, பெப், 28

பதினொரு ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள ஈழப் போரில், விடுதலைப் புலிகள் வெற்றியிட்டும் சாத்தியம் அதிகமாக தென்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறு ''த ஐலண்ட்'' பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி கட்டுரையாளர் சமிந்தா பெர்டினண்டோ எழுதிய கட்டுரையிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

அவரது கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரை தெளிவான தந்திரோபாயங்களைக் கொண்ட உறுதியான அரசியல் தலைமைப்பீடம் ஒன்று இருந்தாலன்றி, விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியாது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தால்

( 3 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரத்தைப் பெறுவதற்கு ஒன்றிணைந்து போராடுவோம்

### பிரிவுபசார விழாவில் ஆயர் மக்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

நாங்கள் தமிழ் மக்கள்—சுதந்திரம் பெற வேண்டுமானால் அதற்காக ஒன்றிணைந்து போராட வேண்டும்.

—இவ்வாறு தெரிவித்தார் ஓய்வு பெற்றுச் செல்லும் தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆயர் அதி. வண. டி. ஜே. அம்பலவாணர்.

ஆயரின் சேவை நலனைப் பாராட்டி நேற்று நடைபெற்ற பிரியாவிடை நிகழ்ச்சியில் பதிலுரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணக் கல்லூரிப் பூங்காவில் நேற்று மாலை தென்னிந்திய திருச்சபையினரால் இந்த பிரியாவிடை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. பிதா. எஸ். ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஆயர் வண. அம்பலவாணர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாடுகளில் வாழும் தமிழ் அறிஞர்கள் பலர், எமது பிரச்சினைகளைச் சரிவர உணர்ந்து கொள்வதில்லை. பறங்கியர் இனம் போல, மலைவாழ் இனம் போல அவர்கள் எங்களை யோசிக்கிறார்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உடுகம்பொலவின் புத்தகம் மூலம் அரசின் படுகொலைகள் அம்பலம்

### நியூயோர்க்கில் அச்சாகியது

கொழும்பு, பெப். 28

1987 முதல் 1990 வரை தென்னிலங்கையில் ஜே வி. பி. நடவடிக்கைகள் உச்சக் கட்டத்தில் இருந்தபோது அரசு ஆதரவு சக்திகளினால் மேற்கொள்ளப்பட்ட தொடர் படுகொலைகள் குறித்து விரிவான தகவல்களுடன் புத்தகம் ஒன்று அச்சிடப்பட்டிருக்கிறது.

தலைமறைவாகியிருக்கும் முன்னாள் பொலீஸ் மா அதிபர் உடுகம்பொல எழுதிய இந்தப் புத்தகம் நியூயோர்க்கில் அச்சிடப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகத்தில் உள்ள விடயங்களை கொழும்பில் உள்ள பத்திரிகைகள் மறுபிரசுரம் செய்யாமல் இருப்பதை உறுதிப்படுத்துமுகமாக பத்திரிகைகளை மிரட்டும் நடவடிக்கைகளில் அரச தரப்பினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

அரசியல் பகுப்பாய்வாளர் சிலரை மேற்கோள் காட்டி ''சண்டே ஐலண்ட்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

[ 3ஆம் பக்கம் பார்க்க]

### 32 மாணவர்கள் கடத்தப்பட்ட சம்பவம்:

## பிரிகேடியரும் பல சிப்பாய்களும் ரகசிய பொலீஸின் விசாரணையில்!

கொழும்பு, பெப். 28

1989ஆம் ஆண்டில் எம்பிலிப்பிட்டியாவில் 32 மாணவர்கள் கடத்தப்பட்டு, பின்னர் அவர்கள் காணாமற்போன சம்பவம் தொடர்பாக போர்முனை [illegible] ஒருவரும் பல சிப்பாய்களும அனுராதபுரத்தில் உள்ள கூட்டுப் படைகள் தலைமையகத்துக்கு விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர் என்றும்—

அங்கு அவர்கள் அனைவரும் மூன்று தினங்களாக இரகசியப் பொலீஸ் திணைக்கள உயர் நிலை அதிகாரிகள் குழு ஒன்றினால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் என்றும் பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

விசாரணை நடத்திய குழுவில் இரகசியப் பொலீஸ் திணைக்கள அதிபரும் இடம்

(3ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அடை வைப்பதற்கு உகந்த ஜப்பனீஸ், கழுத்துவெட்டி, இங்கிலீஸ் பன்ரம் (Bantam) கோழி முட்டைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கதிர் தேனீர்க்கடை, துறைமுகச் சந்தி, கொழும்புத்துறை. (24624)

## தேவை

சிறு தொழில் சம்பளத்துடன் பழகக் கூடியவர்கள் தேவை. கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்கத் தொழில் நிலையம், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (24597)

சைக்கிளில் சென்று 'புத்தாக்கி' குளிர்பானங்கள் விற்பனை செய்வதற்கு கமிஷன் அடிப்படையில், விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்: 'இனிமை', மென்பான விநியோகஸ்தர்கள், இல. 54A, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (24628)

## மணமக்கள் தேவை

A/L Bio பெண், 35 வயது, 4இல் செவ்வாய், கிரகபாவம் 30. சகோதரன் சிவில் எஞ்ஜினியர், குற்றமற்ற 37 வயது, பூசம். சகோதரி 31 வயது, ஆசிரியை, மகம். மாற்றாகவோ, தனியாகவோ பெற்றோர் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (24611)

## மணமகன் தேவை

30 வயதுடைய பெண் ஆசிரியைக்கு இந்து மதத்தைச் சேர்ந்த 7இல் செவ்வாய் உடைய அரச வங்கி உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. தொடர்பு: மே/பா 890, உதயன், யாழ்ப்பாணம். (6028)

## துளிர்

தமிழ்நாடு அறிவியல் இயக்கமும், புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ் பாடசாலை மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது. பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். விவரங்களுக்கு: வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6011)

## கல்வி

G. C. E. (O/L)இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 40 மணித்தியாலத்தில் விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். மற்றும் Spoken Eng ish with Grammar உட்பட A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. (24627)

## A/L பௌதிகவியல்

தனிப்பட்ட பிரத்தியேக முறையில் பௌதிகவியல, தூயகணிதம், பிரயோக கணிதம் பல வருடங்கள் அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளோடு சிறப்பாகக் கற்பிக்கப்படும. K. பாலசுப்பிரமணியம் B. Sc. (Cey) Dip. in Edu. இல. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (24625)

## பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டுகள் 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம் வகுப்புகளுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக் கல்வி, ஆங்கிலப் பாடங்களுக்கான வினாத்தாள்கள் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில வெளியிடப்படுகின்றன. விடையளித்துத் தந்தால் திருத்தி கொடுக்கப்படும் Bond Institutes, யாழ்ப்பாணம். (6023)

## A/L மாதிரி வினாத்தாள்

A/L விஞ்ஞானம், வர்த்தம், கலைப் பிரிவுகளுக்கான அனைத்துப் பாடங்களுக்கும், மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும் Bond Institutes யாழ்ப்பாணம். (6021)

## புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதத்திலும் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளிலும், ஊக்குவிப்புப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6022)

## தவறிவிட்டது

லிங்கநாதன் அன் கோ, பில் புத்தகங்களின் ஒரு பகுதி கே. கே. எஸ். றோட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து விவேகானந்தா அச்சகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (24613)

## சனிமாற்றம்

05-03-1993இல் நிகழும் சனி மாற்றப் பலாபலன்கள் பன்னிரு இராசிகளுக்கும் உரியது. விற்பனையாகின்றன. விலை ரூபா 12-00. எங்கும் கிடைக்கும். வெளியீடு: திருக்கணிதம் மட்டுவில், சாவகச்சேரி. (24530)

# வலி-வடக்கு செஞ்சிலுவைச் சங்கம்

நடத்தும்

செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகர் ''கென்றி டுனான்'' ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி.

காலம்: 28-02 1993 (இன்று)
இடம்: ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு அரங்கு, மல்லாகம்.
நேரம்: பி- ப. 3-15 மணி

3-15 மணி ஞானகலா வி. க. மயிலங்காடு
எதிர்
உரும்பராய் யுத். வி. க.

இறுதிப் போட்டி

4-30 மணி:-
ஸ்கந்த ஐக்கிய விளையாட்டுக் கழகம், சுன்னாகம்.
எதிர்
வினாயகர் விளையாட்டுக் கழகம், அளவெட்டி

பிரவேசம்: ரூபா 5/-

— கௌரவ செயலாளர்.

ஆலை ஒழுங்கை, மல்லாகம். (5834)

# நான் உயிரோடு வந்துவிட்டேன்



## க. விஜயகுமார் (குமார்)

கொக்குவில்

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டு கொக்குவிலில் வசித்து வரும் க விஜயகுமார் (குமார்) ஆகிய நான் வியாபார அலுவலின் நிமித்தம் கிளாலிக் கடற்பரப்பூடாகப் பயணம்செய்தேன் அவ்வேளை இராணுவக கொலைக்கு ஆளாகி நான் இறந்து விட்டதாக நம்பப்பட்டதால், இன்னொருவரின் சடலத்தைக் கொண்டு வந்து எனது வீட்டில் இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்ட துக்ககரமான நிகழ்வு இடம்பெற்றது.

நான் இறந்துவிட்டதாகக் கேள்வியுற்று ஓடோடி வந்து அந்தத் துக்க நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், என் மீது வைத்த அன்புக்காக எனது நன்றிகளை கூறுகின்றேன்.

20-02-1993ஆம் திகதிய உதயனிலும் நகர விளம்பர சேவையிலும் அறிவிக்கப்பட்ட மரண அறிவித்தல்கள குறித்து வருந்துகிறன்.

நான் மறுபிறவி எடுத்து வந்தது போல உயிருடன் திரும்பியதைக் கேட்டு நேரில் வந்து மகிழ்ச்சி தெரிவித்து பாசம் பாராட்டிய அன்பு நெஞ்சங்களுக்கு எனது உளமார்ந்த நன்றிகள். இவ்வளவு அன்பர்கள் என்மீது அன்பு வைத்திருக்கிறார்களே என்று புளகாங்கிதம் அடைகிறேன்.

தகவல்களில் ஏற்பட்ட குழப்பங்களினால் உண்டான சிரமங்களுக்கு மன்னித்துக் கொள்க. மீண்டும் நன்றிகள் பலப் பல

உங்கள் அன்பை நேரில் கண்ட அன்பன்:
க. விஜயகுமார் (குமார்).

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு. (24631)

# நன்றி நவிலல்

## இராசமணி சுந்தரம்

எனது தாயார் அமரர் இராசமணி சுந்தரம் அவர்களின் மரணச் சடங்கிலும், 31ஆம் நாள் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்கு பற்றி, பலவகைகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருககும் எனது நன்றி அறிவித்தலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சு. சிவகுமாரன்.

சுந்தர்சன்,
மானிப்பாய். (6019)

# EAGLE SECURITY SERVICE

பதிவு இல: 16739 பாதுகாப்பு இல: I.T.S/463/92
எமது பொது பாதுகாப்பு சேவைக்கு

தொடர்பு கொள்க:-
இல. 159 / 3, நல்லலக்ஷ்மி அவென்யு,
ரெம்பிள் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(24569)

# தேவை

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

1. வைத்திய கலாநிதி M. B. B. S.
2. R. M. P. இரவு நேரக் கடமைக்கு மட்டும்.

தங்குமிட வசதி அளிக்கப்படும்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

- தலைவர்.

(சி-4631)

# 5ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்: 05 — 02 — 1966



விண்ணில்: 28 — 02 — 1988

## துரைசிங்கம் சுதிகரன் (சுதி)

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஒரு நாளேனும் மறக்கவில்லை உன் நினைவை-
ஆறாய்
பெருகும் கண்ணீர் காயவில்லை-எமது
துயரம் இன்னும் தீரவில்லை - உன்
அன்பு முகம் காணாது வாடுகிறோம்
இப் புவியில் நாம் வாழும்வரை - உன்
நினைவுகளும் மறையப்போவதில்லை

உமது துயரால் வாடும்;
அப்பா, அம்மா,
அண்ணா, தங்கை, தம்பிமார்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி, (24626)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 19 — 03 — 1926

மறைவு: 11 — 03 — 1992



## பொன்னம்பலம் வாமதேவன்

(ஓய்வு பெற்ற கல்வி இலாகா லிகிதர்)

திதி: 28 — 02 — 1993

அன்பின் தெய்வமே! நாம் வாழ எம்மை வழி காட்டிய அன்பின் சிகரமே! எம்மை நல்வழி நடத்திய பண்பின் உறைவிடமே! அமைதியின் பிறப்பிடமே! ஆண்டொன்று சென்றாலும், ஆறாது எம் துயரம். நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும், உங்கள் நினைவுகளை நனவாக்குவோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்;
அன்பு மனைவி, மக்கள். மருமகன்,
உற்றார், உறவினர்கள்.

சிவன் வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய், (24605)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# உணவுக் கணக்கு!

இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களிலும் எடுக்கப்பெற்ற புள்ளி விவரங்களின் பிரகாரம், யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களில் மூன்றில் ஒரு பங்கினை மட்டுமே அரசாங்கம் அனுப்பி வைத்திருக்கிறது!

கடந்த இரண்டு மாதங்களிலும் நான்கு உடவைகள் கப்பல்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் பருத்தித்துறை வந்து சேர்ந்தன. ஆனால் மொத்தம் 9 ஆயிரத்து 673 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களே கைக்குக் கிடைத்தன.

குடாநாட்டில் வாழும் 8 லட்சத்து 40ஆயிரம் மக்களுக்கும் மாதாந்தம் ஆகக் குறைந்தது 25,200 மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தேவைப்படுகின்றன. அத்தியாவசிய உணவுப் பொருள்கள் என அரிசி, மா, சீனி, பருப்பு, பயறு, பால்மா ஆகியன அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

போர் நடக்கும் பகுதிகளுக்கு அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் உணவுப் பொருள்களை அனுப்பும் போது, ஒருவருக்கு ஒரு மாதத்துக்குச் சராசரி எட்டு கிலோ உணவுப் பொருள்கள் தேவை என்று கணக்கிடுகிறது. 1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகம் சம்பந்தமான உயர் மட்டக் கூட்டத்தில் இந்த அளவு விவரத்தை மேலதிக அத்தியாவசிய சேவைகள் நாயகம் ஜனாப் ரபீக் உறுதிப்படுத்தி இருக்கிறார்.

அவரது கணக்குப் பிரமாணத்தின்படி பார்த்தாலும் ஒரு மாதத்துக்கு 6,720 மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் குடாநாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கு மொத்தம் 13,440 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் குடாநாட்டிற்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும். ஆனால் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்ததோ மொத்தம் 9 ஆயிரத்து 673 மெற்றிக் தொன்கள் மட்டுமே!

மனிதன் ஒருவனின் உடல் இயக்கத்துக்கு நாள் ஒன்றுக்கு சராசரி முக்கால் கிலோ உணவுப் பொருள்கள் தேவை என்பதுதான் பொதுவான அளவுப் பிரமாணம். அதன் பிரகாரம் ஒரு மாதத்துக்கு 22½ கிலோ அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தேவைப்படுகின்றன. ஆகவே அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தின் நிர்ணயிக்கப்பட்ட அளவு (Standard Measure) ஒருவருக்கு அரை வயிற்றுக்கும் போதாது. சரியாகச் சொல்வதானால் குடாநாட்டுத் தமிழனின் வயிற்றில் மூறில்ன் ஒரு பகுதியை நிரப்புவதற்கே அரசின் நிர்ணயிக்கப்பட்ட அளவு போதுமானதாகும்!

இன்னொரு வகையாகச் சொல்வதானால் தமிழர்கள் ஒரு நாளில் ஒரு நேரம் மட்டுமே உண்ண வேண்டும் என்ற கட்டுப்பாடு மறைமுகமாக அரசினால் விதிக்கப்பட்டு அச்சொட்டாக நிறைவேற்றப்படுகிறது. ஆனால் கடந்த இரண்டு மாதங்களில் அந்த ஒரு நேர உணவையும் அரசு வெட்டிவிட்டது. ஒரு நேரத்துக்குத் தேவையான உணவிலும் முக்கால்வாசியையே அரசு அனுப்பியிருக்கிறது!

இவ்வாறு அனுப்பிவிடுத்தான், கப்பல் கப்பலாக உணவுப் பொருள்கள் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்லப்படுவதாகக் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் பார்ப்பதற்காக தொலைக்காட்சியில் நாளாந்தம் அரசு 'படம்' காட்டுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு ஒரு வேளைச் சாப்பாட்டுக்குப் போதிய உணவைத் தானும் அனுப்பாத அரசு, தனது பொருளாதாரத் தடையையும், போக்குவரத்துத் தடையையும் மறைப்பதற்குச் செய்யும் தில்லுமுல்லுகளை உலகம் கண்டு கொள்வது எப்போது? உண்மையான உணவுக் கணக்கைக் காட்டுவதைத் தவிரத் தமிழர்களால்தான் என்ன செய்ய முடியும்? மனித நேயத்துடன் உதவும் தொண்டர் நிறுவனங்கள் இதனைப் பார்த்திருப்பது தகுமா?

## இன்று

மானிப்பாய் சத்ய சாயி நிலையம் பகவானின் போதனைகள், மனித மேம்பாடுகள் ஆகியவற்றை விளக்கும் கண்காட்சி ஒன்றை இன்று காலை 9-15 மணிமுதல் மாலை 4-30 மணிவரை நிலைய மண்டபத்தில் நடத்தவுள்ளது. (உ-89)

o o o

சுன்னாகம், மயிலணி பகவான் ஸ்ரீ சத்ய சாயி பஜனை நிலையம் ஐந்தாம் ஆண்டு பூர்த்தி விழாவை இன்று பிற்பகல் 2-30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடத்தவிருக்கிறது. (உ-89)

## நாளை

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 3-30 மணிக்கு கல்லூரியின் விவேகானந்த மண்டபத்தில் நடைபெறும்.

விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதமும் கலந்து கொள்வர். (த-162)

★ ★ ★

இடைக்காடு மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (உ-110)

## இன்றைய ஆட்டங்கள்

செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி. வடகுப் பிரிவு நடத்தும் ஹென்றி டுனான் ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 3.00 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டரங்கில் இடம்பெறும்.

முதலாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானகலா வி.க. அணியை எதிர்த்து உரும்பராய் யுத் வி. க. அணி மோதும். தொடர்ந்து நடைபெறும் இறுதியாட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தா ஐ. வி. க. அணியை எதிர்த்து அளவெட்டி விநாயகர் வி. க. அணி மோதும். (உ)

★ ★ ★

உருப்பராய் தெற்கு செல்வபுரம் உதயசூரியன் சனசமூக நிலையம், உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை இடம்பெறும்.

திருமலை நட்சத்திரங்கள் அணியை எதிர்த்து புங்குடுதீவு அம்பாள் வி. க. அணியும், ஊரெழு றோயல் வி. க. அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா வி. க. அணியும் மோதும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப் 28

யாழ். வட்ட லியோ கழகம் நடத்தும் உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட இறுதியாட்டங்களும், பரிசளிப்பு விழாவும் இன்று மாலை அரியாலை மதிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும்.

பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய வி. க. "ஏ", அணியை எதிர்த்து தெல்லிப்பளை கிறாஸ் கொப்பர்ஸ் வி. க. அணி மோதும்.

மாலை 4 மணிக்கு நடைபெறும் உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் பாடும் மீன் வி. க. அணியை எதிர்த்து சென். றோக் வி. க. அணி மோதும்.

யாழ். வட்ட லியோ கழகம் நடத்திய அபிமான உதைபந்தாட்ட வீரர் தெரிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இன்று இடம்பெறும்.

யாழ். திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன், திருமதி பத்மநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகப் பங்குபற்றுவர்.

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 28

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டங்களை ஒட்டிய மென் பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று காலை 8 30 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் ஆரம்பமாகிறது.

## சிறப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம் பெப். 28

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் சிறப்புப் பொதுக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

"ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும் விபுலாநந்த அடிகளும்" என்ற தலைப்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சரசர்மா, கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் திரு: வெ. இளங்குமரன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

"யாழ் நூல் எது கூறுகிறது?" என்ற தலைப்பில் பண்டிதர் க சச்சிதானந்தன் ஆய்வுரை நிகழ்த்துவார்.

1992 ஆம் ஆண்டில் சங்கம் நடத்திய பாலபண்டித, பிரவேச பண்டிதப் பரீட்சைகளில் சித்தி பெற்றோருக்கு இந் நிகழ்ச்சியின் போது சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன. (உ)

## வட - கிழக்கு ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கோராமல் ஒரே அளவு தொகை கோரப்பட்டது ஏன் என்று கேட்டதற்கு—

சென்ற முறை வாங்கிய பணத்தில் வடக்கு-கிழக்குக்கென ஒதுக்கிய பணமும், வேறு சில திட்டங்களுக்கான பணமும் செலவிடப்படாமல் தேங்கிக் கிடப்பதாகவும்—

அதன் காரணமாக கூடுதல் நிதியுதவியைக் கேட்க வேண்டிய தேவை ஏற்படவில்லை என்றும் திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் இவ்வாண்டு ஜூன் 16 இல் பாரிஸ் நகரில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரியில் பாரிஸில் நடந்த உதவும் நாடுகளின் கூட்டத்தில், இலங்கை கோரிய 80 கோடி டொலர் நிதி உதவியிலும் பார்க்க கூடுதலாக 25 கோடி டொலர் நிதி உதவியை வழங்குவது என்று இந்த நாடுகள் தீர்மானித்தது தெரிந்ததே. (அ-எ)

## உடுகம்பொலவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1987 முதல் 1990 வரை தென் இலங்கையில் ஜே.வி.பி. நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தில் இருந்தபோது இடம்பெற்ற படுகொலைகளுக்குப் பின்னால் செயற்பட்ட சக்திகள் பற்றி உடுகம்பொல தமது புத்தகத்தில் விவரித்துள்ளார்.

அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்துள்ள அப்புத்தகம் இலங்கையில் தடை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எப்படியோ அப்புத்தகம் இலங்கையில் உள்ளவர்களின் கைகளுக்குக் கிடைத்து அதில் உள்ள விஷயங்கள் சுயேச்சைப் பத்திகைகளில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படுமானால் அது அரசுக்கு அவதூறை ஏற்படுத்தும் என்று அரச தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

அப்படி பிரசுரமாவதைத் தடுக்கும் ஒரு நடவடிக்கையாக கொழும்புப் பத்திரிகைகளை மிரட்டும் கொள்கையை அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## 11 வருட...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டு வரும் புதுவிதமான ஆயுதங்களின் கொள்வனவு படை ரீதியாக விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க உதவாது

விடுதலைப் புலிகள் தமிழீழத்தைப் பெறுவதற்கு இராணுவ ரீதியானதும் அரசியல் ரீதியானதும், பொருளாதார ரீதியானதும், கோட்பாட்டு ரீதியானதுமான தந்திரோபாயங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் தாங்கள் அடைய வேண்டிய இலக்குகளை அடைந்து வருகின்றனர்.

கடந்த வருடம் அவர்கள் எவற்றை அடைய விரும்பினார்களோ, அவற்றை அடைந்துள்ளனர். இந்த ஆண்டிலும் அவர்கள் அடைய விரும்பும் குறிக்கோள்களை அடைவார்கள் அதனை எவராலும் தடுக்க முடியாது

இவ்வாறு அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# பாதித் தேங்காய் வாங்க யோசனை செய்த இருவர்!

## கஷ்டத்திலும் நன்மை உண்டு?

யாழ்ப்பாணம், பெப். 28

"இதில் நீங்கள் அரைவாசியை எடுக்கிறீர்களா? நான் மிகுதிப் பாதியை எடுக்கிறேன்."

நீளக் காற்சட்டை அணிந்த ஆண்கள் இப்படி ஆங்கிலத்தில் பேசிக் கொண்டார்கள்.

திருநெல்வேலிச் சந்தையில் தேங்காய் வாங்கும் இடத்தில் தான் இந்த உரையாடல் நடந்தது.

தேங்காய் விலையின் நம்பமுடியாத உயர்வைச் சமாளிக்கவே இந்த "அரைப்பாதி, அரைப்பாதி" வழிமுறையை யோசித்தார்கள்.

ஆனால் பல இடங்களில் தேங்காயை இரண்டாக உடைத்து விற்பனை செய்வதையும் காணமுடிகிறது.

கஷ்டத்திலும் நன்மை உண்டு என்பார்கள். தேங்காய் விஷயத்திலும் இது உண்மை என்று எண்ண இடமுண்டு.

தினமும் ஒரு தேங்காய், இரண்டு தேங்காய் பாவித்துப் பிட்டு அவித்து கறி சமைத்தவர்கள் தற்போது அரைத் தேங்காயுடன் அல்லது சில வேளைகளில் தேங்காய் இல்லாமலே உணவைத் தயாரிக்கப் பழகிக் கொள்கிறார்கள்.

முன்னர் "பாணும் சம்பலும்" ஏழையின் சாப்பாடு. இப்பொழுதோ "சம்பல்" என்பது எட்டாத உணவு வகையாகி உள்ளது.

பலர் இதற்கு மாறாக வெங்காயத்தைக் கூடுதலான அளவில் பாவிக்கின்றார்கள்.

"தேங்காய்ப் பாலை உணவில் குறையுங்கள்" என்று அறிவுரை கூறிவரும் டாக்டர்களுக்கு தேங்காய் விலை உயர்ந்தது ஒரு வேளை மகிழ்ச்சியை அளிக்குமோ என்னவோ! (அ-க)

## குண்டு வெடிப்பு

நியூயோர்க், பெப் 28

அமெரிக்காவின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான நியூயோர்க்கில் நேற்று முன்தினம் திகிலூட்டும் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது

உலகில் இரண்டாவது உயரமான—110 மாடிகளைக் கொண்ட—கட்டடம் ஒன்றிலேயே குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அமெரிக்காவின் முக்கிய நகரங்கள் எங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

குண்டு வெடிப்பில் குறைந்தது ஐவர் கொல்லப்பட்டனர். ஐநூறுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

உலக வர்த்தக நிலையத்தில் "கராஜ்" ஒன்றில் நிறுத்தி வைக்கபபட்டிருந்த காரில் இருந்தே குண்டு வெடித்திருக்கலாம் என நம்பப்படுகிறது

குண்டு வெடித்த மாடியின் தளத்தில் 200 அடி அகலமான குழி ஒன்று காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## பிரிகேடியரும் பல சிப்பாய்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றிருந்தார்.

தற்போது இறந்துவிட்டதாகக் கருதப்படும் 32 மாணவர்களைக் கடத்திய சம்பவத்துக்கும் இந்த இராணுவத்தினருக்கும் தொடர்பு இருந்ததற்கான சாட்சியம் இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் கூறின.

விசாரணை முடிவில் இவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வது பற்றி இறுதி முடிவை எடுப்பதற்காக இவர்கள் சம்பந்தமான கோவை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கடத்தல் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் பணியகத் தலைவர் ஜே. எப். ஏ. சூஸா, எம்பிலிப்பிட்டியாவில் உள்ள செவன முகாமில் பணிபுரிந்த ஆறாவது ஆட்டிலறி பிரிவைச் சேர்ந்த 6 சிப்பாய்களையும் 2 அதிகாரிகளையும் முன்னர் அடையாளம் கண்டிருந்தார்.

அச்சமயம் அப்பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி கேர்ணல் தரத்தில் இருந்து பின்னர் பிரிகேடியராக பதவி உயர்த்தப்பட்டார். கப்டன் தரத்தில் இருந்த இன்னொரு அதிகாரி பின்னர் மேஜராக பதவி உயர்த்தப்பட்டார்.

தற்போது ஜெனிவாவில் நடக்கும் ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தில் எம்பிலிப்பிட்டிய மாணவர் கடத்தல் விவகாரம் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படலாம் என்று நம்பப்படுகின்றது. (உ-எ)

ROYAL INSTITUTE
(மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக)
மானிப்பாய்.
SPOKEN ENGLISH
By
Mr. BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்: 05-03-93
வெள்ளி 4 - 00 p. m.
[24593)

விவசாயிகளே!
★ மிளகாய் ★ கத்தரி
போன்ற
பயிர்களுடன் போட்டியிட்டு வளரும் களைகளை சிறப்பாகக் கட்டுப்படுத்துவதற்குப் பாவியுங்கள்
'டெவ்ரினோல் 50டபிள்யு.பி.'
✶ களைகள் முளைக்க முன் கட்டுப்படுத்தும் தன்மை.
✶ பயிர்களின் எந்த வளர்ச்சிப் பருவத்திலும் தெளிக்கலாம்.
✶ பயிர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.
(தெளிக்கும பொழுது தரை களைகள் இல்லாது, துப்புரவாகவு', நன்கு ஈரலிப்பாகவும் இருக்க வேண்டும். அதாவது, பாத்தி கட்டி முதல் நீர் பாய்ச்சியதும், அந்த ஈரலிப்புடன் தெளிக்க வேண்டும். 1அவு. டெவ்ரினோலை ஒரு கலன் நீரில் கலக்கவும்.)
CIC
கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்,
த. பெ. எண் 352, கொழும்பு.
(சி-4475)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கம்

யாழ்ப்பாணம்.

*புற்றுநோய் வராமல் தடுப்பதற்கான இலவச பரிசோதனையும்/ஆலோசனைகளும் எமது சங்கத்தால் வழங்கப்படுகின்றன.*

**வாரத்தில்:**

(1) செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில்
மாலை 3-00 — 5 00 மணி வரை

ஞாயிற்றுக்கிழமையில்:
காலை 10-00 — 12-00 மணி வரை
வாய் பரிசோதனை பல் வைத்திய நிபுணரினால் மேற்கொள்ளப்படும்.

(2) திங்கள், புதன் கிழமைகளில்:
மாலை 3-00 — 5 00 மணி வரை
பெண்களுக்கான மார்புப் பரிசோதனை வழங்கப்படும்.

விவரங்களுக்குச் சங்கப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்:

இல. 228, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4633)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா அன்னப்பிள்ளை

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 149/1, கோவில் வீதி, நல்லூரில் வசித்தவருமாகிய திருமதி கந்தையா அன்னப்பிள்ளை 27 - 02 - 1993 சனிக்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கந்தையாவின் (அமுதசுரபி புங்குடுதீவு சந்தையடி) மனைவியும், பாலசுப்பிரமணியத்தின் (பாலன்) (புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) தாயாரும், காலஞ்சென்ற அம்பலவாணர் சிவகாமியின் மகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு நாகமுத்துவின் மருமகளும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, காலஞ்சென்ற சண்முகம், காலஞ்சென்ற பொன்னம்மா, ஆறுமுகம், காலஞ்சென்ற ஏரம்பு, சற்குணம், செல்லம்மா ஆகியோரின் சகோதரியும், கோபாலபிள்ளை திருநெல்வேலிச் சந்தை), லோசசுந்தரி ஆகியோரின் சிறியதாயாரும், பானுமதியின் அன்பு மாமியாரும், சோபனரூபன், ராஜமோகன், லோகிதா, கயந்தினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (28 - 02 - 1993) ஞாயிற்றுக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 10-00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
இ. இராஜேந்திரம்.
149/1, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(24630)

*அதி வணக்கத்துக்குரிய*

## U. E. ரமேஷ் சுவாமிகள்

(பீடாதிபதி, செங்கற்படை ஆச்சிரமம், சங்கானை)

சங்கானை செங்கற்படை மகாதேவ விநாயகர் ஆலய மருங்கில் அமைந்துள்ள, செங்கற்படை ஆச்சிரமத்தின் பீடாதிபதியான அதிவணக்கத்திற்குரிய U. E. ரமேஷ் சுவாமிகள் அவர்கள் 1993-02-27 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் சஷ்டித்திதியும், பரணி நட்சத்திரமும் ஒருங்கமைந்த சுபவேளையில் செங்கற்படை மகாதேவப் பிள்ளையாரின் திருவடிகளில் சங்கமமானார்.

சுவாமிகளின் அபரக்கிரிகைகள் இன்று 1993-02-28 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சங்கானை பெரியவளவு திரு. மாதவர் கனகஇராஜநாயகம் அவர்கள் இல்லத்தில் நிகழ்வுற்று, சுவாமிகளின் பூதஉடம்பு சிவாக்கினியுடன் சங்கமிப்பதற்காக அவரது இல்லத்தில் இருந்து விளாவெளி சைவ மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

அன்பர்கள், அடியார்கள், அனுதாபிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் வேண்டப்படுகின்றனர்.

தகவல்
திரு. மாதவர் கனக இராஜநாயகம்
ஆச்சிரமப் பொறுப்பாளர்
பெரியவளவு,
சங்கானை.
1993 - 02 - 27
(24634)

## மயில்வாகனம் கணேசம்மா

(உடுவில்)

உடுவிலைச் சேர்ந்த மயில்வாகனம் கணேசம்மா 24-02-93 இல் 32/1, பாமன்கடை வீதி, கொழும்பு 6 இல்லத்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், இந்துசேகரம் (அவுஸ்திரேலியா), காலாமணி (லண்டன்), சண்முகசுந்தரம (லண்டன்), சக்திதாஸன் (ஓமான்), ஜெயலஷ்சுமி (ஜேர்மனி), கௌரிசங்கர் (சுவிஸ்), கௌரிமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், தியாகராஜா (லண்டன்), கந்தசாமி (ஜேர்மனி), சிறீரஞ்சினி, சுசீலா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (28 - 02 93) கொழும்பில் நடைபெறும்.

தயவு செய்து இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
கௌ. சுசீலா
(மருமகன்)
''திருவருள்''
சிவஞான பிள்ளையார் கோவிலடி,
உடுவில்.
(5835)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 280/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28-02-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## குருபூசை

தவத்திரு கந்தையா (குடை) சுவாமிகளின் வருடாந்த குருபூசை இன்று ஞாயிற்றுக் கிழமை கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்தில் அமைந்திருக்கும் அவரது சமாதியில் நடைபெறும். (சு)

## பிரிவுபசார விழா

தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆயர் அதிவண. டி. ஜே. அம்பலவாணருக்கு யாழ்ப்பாணக் கல்லூரியின் சார்பில் நாளை பிரிவுபசாரம் வழங்கப்படும். கல்லூரிப் பூங்காவில் நாளை காலை பத்து மணிக்கு பிரிவுபசார நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

## சுதந்திரத்தை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இலங்கையில் சிங்களவர், தமிழர் ஆகிய இரண்டு தேசிய இனங்கள் உள்ளன என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். இந்தப் பிரச்சினையை எம்மவர்கள் சரியாக உணர்ந்து கொண்டால் தான் எமக்கு விடிவு கிடைக்க முடியும்.

சுதந்திரமாக வாழவேண்டும் என்பதே எமது இன்றைய தலையாய பிரச்சினையாகும். அதனை அடைய நாம் அனைவரும் ஒத்துழைத்து — ஒன்றிணைந்து — போராடவேண்டும். நீதிக்காகப் போராடும் போது ஐக்கியம் அவசியம் ''நான்தான்'' என்ற எண்ணத்தை நீக்கி ''நாம்'' என்ற நிலைக்கு வரவேண்டும் — என்றார்.

முன்னதாக இந்நிகழ்ச்சியில் பேசிய கத்தோலிக்க திருச்சபையின் யாழ் ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் தமது உரையில்—

இதர மக்கள் மத்தியில் நல்லுறவை வளர்க்கப் பாடுபட்டவர் ஆயர் அம்பலவாணர் என்றார்.

''இடர்ப்பாடுகள் நிறைந்த காலகட்டத்தில் தமிழ் மக்களின் குரலாக ஒலித்தவர்; துணிச்சல் மிக்கவர், தென் பகுதிக்குச் சென்று தமிழர்களுடைய இன்னல்களை அங்குள்ள கிறிஸ்தவ சபைகளுக்கு எடுத்துரைத்தவர்'' —என்றும் அவர் புகழாரம் சூட்டினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தமது உரையில் தெரிவித்ததாவது:-

மக்கள் அல்லலுறும் வேளைகளில் இறைவன் மதத் தலைவர்களின் மூலம் வெளிப்படுகிறார். ஆயரின் பாராட்டு விழா மக்களுக்கு சேவைசெய்த அன்புக்கும் தொண்டுக்கும் எடுக்கப்படும் விழாவாகும். மக்களுக்கு செய்யும்சேவையே இறைவனுக்குச் செய்யும் தொண்டு எனக் கருதி உழைத்தவர் ஆயர் அம்பலவாணர். மக்களை இறைவனாகக் கருதி அவர்களுக்குச் சேவை செய்தவர் அவர். — என்றார்.

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத் தலைவர் டாக்டர் ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா, உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி சி. வி. செல்லையா, தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் சார்பில் யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. ராஜன் கதிர்காமர், வட்டுக்கோட்டை மக்களின் சார்பில் சட்டத்தரணி எம். கே சுப்பிரமணியம், குருமார்களின் சார்பில் எஸ். பி. ஜெயசிங்கம் ஆகியோரும் ஓய்வு பெற்றுச் செல்லும் ஆயரின் சேவையைப் பாராட்டி உரை நிகழ்த்தினர்.

முன்னதாக பிரிவுபசார விழாவுக்கு வருகை தந்த ஆயர் அம்பலவாணரும் அவரது துணைவியாரும் பேராயர் இல்லத்திலிருந்து மேளவாத்தியம், கரகாட்டம், பாண்ட் வாத்தியம் சகிதம் நிகழ்ச்சி நடைபெற்ற இடத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் தென்னிந்திய திருச்சபையின் செயலாளர் திரு. ஜி. இராஜநாயகம் நன்றியுரை நிகழ்த்தினார். (அ-உ-க-161)

## மலேரியா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையை மலேரியா நோய் அதிகரிக்கும் நான்கு ஆசிய நாடுகளில் ஒன்றாகக் குறிப்பிட்டிருந்தது.

குழந்தைகள், குறிப்பாக 2 வயது முதல் 6 வயது வரையானவர்கள் இலகுவாக மலேரியா நோய்வாய்ப்படுகின் [illegible]
(அ-க)

# மட்டு. மகிழவெட்டுவானில் தமிழரின் நெற்சூடுகள் தீயில்!

## ஸ்ரீலங்கா ராணுவத்தினர் அட்டகாசம்

யாழ்ப்பாணம், பெப். 28

மட்டக்களப்பு மாவட்டம் மகிழவெட்டுவான் பகுதியில் கடந்த புதன்கிழமை தமிழர்களின் நெற்சூடுகள் பல இராணுவத்தினரால் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

கிராமத்தினுள் புகுந்த இராணுவத்தினர், கண்மூடித்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தினர் என்றும், இதில் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் நவின்டில்யாமடு என்ற கிராமத்திலும் இராணுவத்தினர் இவ்வாறான அடாவடித்தனங்களில் ஈடுபட்டனர் என்றும் செய்திகள் தெரிவித்தன.

## மட்டக்களப்பு பகுதிகளில்

# இராணுவ முகாம்களில் நிவாரணம் வழங்க ஏற்பாடு

## மக்கள் தயக்கம் காட்டுகின்றனர்

யாழ்ப்பாணம், பெப் 28

மட்டக்களப்பில் குறிப்பிட்ட சில பகுதிகளில் இராணுவ முகாம்களுக்கு வந்து உணவு நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு படையினர் கட்டளையிடுகின்றனராம்.

ஆனால் தமிழ் மக்கள் இராணுவ முகாம்களுக்குச் செல்ல தயக்கம் காட்டி வருகின்றனர். அங்கு சென்றால் தாம் கைது செய்யப்படலாம் என அவர்கள் அஞ்சுகின்றனர்.

நிவாரண விநியோகத்தில் அரச அதிகாரிகள் மோசடியில் ஈடுபடுகின்றனர் என்று காரணம் காட்டியே இராணுவத்தினர் முகாம்களில் நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# தேவை

**யாழ் நகரில்:**

புகைப்பட நிலையம் ஒன்றிற்கு

★ நிர்வாகத் திறமையுடைய
காசாளர் தேவை
இருபாலாரும் விரும்பத்தக்கது.

★ கறுப்பு, வெள்ளை புகைப்படங்களின் Finishing பழகி, வேலை செய்வதற்கு:
பயிலுனர்கள் தேவை
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

இல. 889, மே/பா உதயன்.
13-03 1993 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.
(சி-4489)

# யாழ்ப்பாணக் கல்லூரி

வட்டுக்கோட்டை

# பிரியாவிடை வைபவம்

*தென்னிந்திய திருச்சபையின் பேராயர்*

**அதிவண. டி. ஜே. அம்பலவாணர்**

**டாக்டர் திருமதி சி. அம்பலவாணர்**

அவர்களின்
பிரிவுபசார விழாவினை யாழ்ப்பாணக் கல்லூரி நடத்துகின்றது.

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி
உள்முற்றம்

காலம்: 01 — 03 — 1993 திங்கள்
முற்பகல் 10-00 மணி

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

- முதல்வர்.

கல்லூரி பூங்கா,
வட்டுக்கோட்டை.
(சி-4479)

# கண்ணீர் அஞ்சலி

## திரு. அ. நிமலன்

(அம்பாள் பேக்கரி உரிமையாளர்,
மட்டுவில் வடக்கு, மட்டுவில்)

எமது சங்கத்தின் உறுப்பினரும், தென்மராட்சிக் கிளை உபசெயலாளரும், தென்மராட்சிக் கிளையின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவருமான திரு. அ நிமலன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆற்றொணாத் துயர் அடைகின்றோம். இவரின் மறைவு எமது சங்கத்திற்குப் பேரிழப்பாகும்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(24615)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org